# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 224/ந/2025, நாள் 26.12.2025</u>

மு. செந்தூரபாண்டியன்,
பழனிசெட்டிபட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
தேனி–அல்லிநகரம் நகராட்சி, – எதிர்மனுதாரர்
தேனி மாவட்டம்.

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி, வடக்கு ஜெகநாதபுரம், காமாட்சியம்மன் கோயில் தெரு, கதவு எண். 9–6–81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவரின் 19.06.2025 நாளிட்ட மனு 23.06.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 224/ந/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டுமனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>**ஆணை**</u>

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி, வடக்கு ஜெகநாதபுரம், காமாட்சியம்மன் கோயில் தெரு, கதவு எண்.9–6–81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவர் தனது 19.06.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"14.06.2024 அன்று மனுதாரர் மு. செந்தூரபாண்டியன் ஆகிய நான் தேனி–அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று தேனி–அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.30, கொட்டக்குடி, ஆற்றங்கரையில் சர்வே எண்.1762/1–ல் எனக்கு க. எண். வ.ப/இவஅ1/கோ.11/2017, நாள் 19.12.2017 மற்றும் க.எண்.196Mவ.ப/இவஅ1/கோ.11/2018, நாள் 01.06.2018 செயற்பொறியாளர், நீர் ஆதார அமைப்பு மஞ்சளாறு வடிநில கோட்டம், பெரியகுளம் அவர்களின் வாயிலாக விளம்பர கம்பி ஊன்றி கொள்ள தடையின்மை சான்று வழங்கப்பட்டது. இதனை வைத்து மு. செந்தூரபாண்டியன் ஆகிய நான் பணியாளர்களை வைத்து சிமெண்ட் கான்கிரிட் அமைத்து, அதன் மீது 2 அடி அளவு 2 விளம்பர கம்பி ரூ.22,000/– செலவில் ஊன்றி வைத்திருந்தேன். இந்த நிலத்தில் தேனி–அல்லிநகரம் நகராட்சி, வார்டு எண்.30, கொட்டக்குடி, ஆற்றங்கரையின் அருகில் வசிக்கும் நபர்கள் கட்டிடம் கட்டிக்கொண்டு உள்ளனர். இந்த கட்டிட பணியை உடனடியாக தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் அவர்கள் நிறுத்த வேண்டும். மேலும் தேனி–அல்லிநகரம், நகராட்சி வார்டு எண். 30, கொட்டக்குடி ஆற்றங்கரையில் சர்வே எண்.1762/1–ல் எனக்கு க.எண். வ.ப/இவஅ1/கோ.11/2017, நாள் 19.12.2017 மற்றும் க.எண்.196M வ.ப/இவஅ1/கோ.11/2018, நாள் 01.06.2018 வாயிலாக விளம்பர கம்பி ஊன்றி கொள்ள தடையின்மை சான்று வழங்கப்பட்ட நிலத்தில் தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர்

அவர்களிடம் கட்டிட வரைபட அனுமதி இன்றி கட்டிடம் கட்டி உள்ளனர். இந்த கட்டிடத்தை இடித்து அகற்ற தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்ற புகார் மனுவை ஆணையர், தேனி–அல்லிநகரம் நகராட்சி அலுவலகம், தேனி அவர்களிடம் மு. செந்தூரபாண்டியன் ஆகிய நான் 14.06.2024 அன்று நேரில் சென்று புகார் அளித்தேன். இந்த புகார் மனுவிற்கு ஒப்புகை சீட்டு எதுவும் வழங்கப்படவில்லை. இந்த கட்டிடத்தை இடித்து அகற்ற உயர்திரு செயலாளர் அவர்கள், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் எண்.100 அண்ணா சாலை கிண்டி, சென்னை– 600 032 அவர்கள் உத்தரவிட வேண்டுமாய் மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 1928/2025/எப்1, நாள் 30.07.2025–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தேனி–அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 30, கொட்டக்குடி ஆற்றங்கரையில் ச. எண். 1762/1–ல் கட்டப்பட்டுள்ள இடத்தில் செயற்பொறியாளர், நீர் ஆதார அமைப்பு மஞ்சளாறு வடிநில கோட்டம், பெரியகுளம் அவர்கள் மூலமாக திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவருக்கு விளம்பர பதாகைகள் கம்பி ஊன்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மேற்படி இடத்தில், தனி நபர்கள் நகராட்சியின் மூலம் கட்டிட அனுமதி ஏதும் பெறாமல் கட்டி வருவதாகவும், அதனை அகற்ற கோரியும் மனு செய்துள்ளார். மேற்படி வரப்பெற்ற மனுவின் படி இடமானது நேராய்வு செய்யப்பட்டதில் ஏற்கனவே மேற்படி கட்டுமானம் நகராட்சியின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடமானது ஆற்றங்கரையோரம் என்பதால் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடமாகும். மேற்படி இடத்தில் கட்டுமானம் தற்போது நிறுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 23.09.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 15.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவர் 23.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"14.06.2024 அன்று எனக்கு தேனி–அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தின் மூலம் தேனி–அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.30, கொட்டக்குடி, ஆற்றங்கரையின் சர்வே எண்.1762/1–ல் க.எண்.வ.ப./இவஅ1//கோ.11/2017, நாள் 19.12.2017 மற்றும் க.எண்.196M வ.ப./இவஅ1/கோ.11/2018, நாள் 01.06.2018 செயற்பொறியாளர், நீர் ஆதார அமைப்பு மஞ்சளாறு வடிநில கோட்டம், பெரியகுளம் அவர்களின் வாயிலாக விளம்பர கம்பி ஊன்றி கொள்ள தடையின்மை சான்று வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பணியாளர்களை வைத்து சிமெண்ட் கான்கிரிட் அமைத்து, அதன் மீது 2 அடி அளவு 2 விளம்பர கம்பி ரூ.22,000/– செலவில் ஊன்றி வைத்திருந்தேன். இந்த நிலத்தில் தேனி–அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.30, கொட்டக்குடி, ஆற்றங்கரையின் அருகில் வசிக்கும் நபர்கள் கட்டிட அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருகின்றனர். இந்த கட்டிட பணியை உடனடியாக தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் அவர்கள் நிறுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டேன். இந்த கட்டிடத்தை இடித்து அகற்ற தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்ற எனது புகார் மனுவை தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரிடம் 14.06.2024 நேரில் அளித்தேன். மேலும் மேற்பட்ட நிலத்தில் தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் அவர்களிடம் கட்டிட வரைபட அனுமதி இன்றி கட்டிடம் கட்டி உள்ளனர். இந்த கட்டிடத்தை இடித்து

அகற்ற உயர்திரு செயலாளர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் உத்திரவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண். SA/6171/D-2021 விசாரணை நாள் 12.06.2024ல் வழங்கப்பட்ட புகைப்பட நகல் இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன்.

முறையீட்டு மனு எண். 224/ந/2025 தொடர்பாக தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் அவர்கள் முறைமன்ற நடுவ ஆணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றி உரிய நடவடிக்கை எடுத்து விளம்பரக்கம்பி ஊன்றி நான் விளம்பரம் செய்து கொள்ள அனுமதி வழங்க உத்தரவிட வேண்டுமாய் இம்முறைமன்ற நடுவத்தை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்."எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1928/2025/ எப்1, நாள் 22.09.2025–ல் தேர்தல் தொடர்பான அவசர பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் 23.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலாத சூழ்நிலை உள்ளதால் மாற்று தேதி வழங்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 05.11.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 27.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. மனுதாரர் திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவர் 05.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"1) 2017ம் ஆண்டு தேனி–அல்லிநகரம், நகராட்சி வார்டு எண்.30, கொட்டக்குடி, ஆற்றங்கரையின் சர்வே எண்.1762/1–ல் வாயிலாக விளம்பர கம்பி ஊன்றி கொள்ள பெரியகுளம், மஞ்சளாறு வடிநில கோட்டம் நீர் ஆதார அமைப்பு செயற்பொறியாளரால் தடையின்மை சான்று வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் சிலர் ஆக்கிரமிப்புகள் செய்து கட்டடம் கட்டி வருகின்றனர். இதுகுறித்து 14.06.2024 அன்று தேனி–அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் நேரில் சென்று அளிக்கப்பட்ட மனுவிற்கு நகராட்சியால் ஒப்புகை சீட்டு வழங்கப்படவில்லை. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை எனக்கு தெரியப்படுத்த வேண்டுகின்றேன். மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புகள் இருந்த நிலைமையிலேயே உள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

2) தற்போதைய தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணையின்படி எனக்கு விளம்பர அனுமதி வழங்கப்படவேண்டும் என்பதாக நகராட்சி ஆணையரிடமிருந்து நான் விளம்பர பதாகைகளை அமைத்துக்கொள்வதற்கு விளம்பர அனுமதி வழங்கக்கோரி, நகராட்சிக்கு விண்ணப்பிக்கின்றேன் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன். இதுவரை மாவட்ட நிர்வாகத்தின் அனுமதி பெறப்படவில்லை.

3) நான் அமைத்துள்ள விளம்பர தூண்கள் அமைக்கப்பட்ட இடம் நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்யவும் கேட்டுக்கொள்கின்றேன்.

4) எனது மனு மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உதவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரரான தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையர் 05.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

"தேனி–அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 30 கொட்டக்குடி ஆற்றங்கரையில் ச. எண்.1762/1–ல் கட்டப்படுள்ள இடத்தில் செயற்பொறியாளர், நீர் ஆதார அமைப்பு மஞ்சளாறு வடிநில கோட்டம், பெரியகுளம் அவர்கள் மூலமாக திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவருக்கு

விளம்பர பதாகைகள் கம்பி ஊன்றி அமைத்துக் கொள்ள தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மேற்படி இடத்தில் சிலர் நகராட்சியில் கட்டிட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி வருவதாகவும் அதனை அகற்ற கோரியும் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனு செய்துள்ளார்.

நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் விளம்பர பதாகை வைத்துக்கொள்ள நீர்வளத் துறையில் 2017–ல் தடையின்மை சான்று பெற்றுள்ளார். மேற்படி சான்று பெற்ற பின்பு மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் இதுநாள் வரை மனுதாரர் மேற்படி இடத்தில் விளம்பர பதாகை வைப்பதற்கு விண்ணப்பிக்கவில்லை என தெரிய வருகிறது.

மனுதாரர் விளம்பர தூண்கள் அமைக்கவுள்ள இடம் நீர்வள ஆதாரத் துறையைச் சார்ந்தது என்பதாலும், மேற்படி தடையின்மை சான்று பெற்று 8 ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும், மனுதாரர் தற்போது புதியதாக மேற்படி துறை, காவல் துறை போன்ற துறைகளிடமிருந்து தடையின்மை சான்றுகள் பெற்று நகராட்சியில் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். மேற்படி விண்ணப்பம் பெறப்பட்ட பின்னர் இடம் நேராய்வு செய்யப்பட்டு, உரிய விதிமுறைகளின்படி அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி மனுதாரரின் மனுவில் தெரிவித்துள்ள இடமானது நேராய்வு செய்யப்பட்டதில், ஏற்கனவே மேற்படி கட்டுமானம் நகராட்சியின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடமானது ஆற்றங்கரையோரம் என்பதால் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடமாகும். மேற்படி இடத்தில் கட்டுமானம் தற்போது நிறுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்." எனத் தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலங்கள், எதிர்மனுதாரரான தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தேனி–அல்லிநகரம் நகராட்சி, கொட்டக்குடி ஆற்றங்கரையில் உள்ள பகுதியில் விளம்பர கம்பி ஊன்றி கொள்ள செயற்பொறியாளர், பெரியகுளம் நீர் ஆதார அமைப்பு மஞ்சளாறு வடிநில கோட்டம் மூலம் தடையின்மை சான்று பெறப்பட்டதைத் தொடர்ந்து, சிமெண்ட் கான்கிரிட் அமைத்து, 2 அடி அளவு கொண்ட இரண்டு விளம்பர கம்பிகள் ஊன்றி வைத்த இடத்தில், அருகில் வசிக்கும் நபர்கள் நகராட்சியின் அனுமதியின்றி கட்டிடம் கட்டியுள்ளதால், அதனை அகற்றுமாறு நகராட்சி ஆணையரை கோரியிருப்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஆற்றங்கரையோர இடம் நகராட்சியால் நேராய்வு செய்யப்பட்டதில், மேற்படி இடத்தில் இருந்த கட்டுமான பணிகள் ஏற்கனவே நகராட்சியால் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளதாகவும், 2017–ல் நீர்வளத் துறையின் மூலம் விளம்பர பதாகைகள் கம்பி ஊன்றி அமைத்துக் கொள்ள தடையின்மை சான்று வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், விளம்பர பதாகை வைப்பதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற நகராட்சியிடம் விண்ணப்பிக்கவில்லை எனவும், மேற்படி இடம் நீர்வள ஆதாரத் துறையைச் சார்ந்தது என்பதாலும், மேற்படி தடையின்மை சான்று பெற்று 8 ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும், மனுதாரர் தற்போது புதியதாக தடையின்மை சான்று பெற்று, மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற நகராட்சியில் விண்ணப்பிக்கும்பட்சத்தில், மேற்படி இடம் நேராய்வு செய்யப்பட்டு, உரிய விதிமுறைகளின்படி அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய வருகிறது.

இந்நேர்வில், மனுதாரர் விளம்பர பதாகைகள் அமைக்க தடையின்மை சான்று பெற்று 8 ஆண்டுகள் ஆனதால், புதியதாக தடையின்மை சான்றுடன், மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கு நகராட்சியில் விண்ணப்பிக்கும்பட்சத்தில், உரிய விதிமுறைகளின்படி மனுதாரருக்கு அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை மனுதாரர் கருத்திற்கொண்டு, அவ்வாறே விண்ணப்பிக்குமாறு மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி,

மனுதாரரின் மனுமீதான நடவடிக்கையினை முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. மு. செந்தூரபாண்டியன் ,
   த/பெ. செ.முருகன்,
   எண்.9–6–81, காமாட்சியம்மன் கோயில் தெரு,
   வடக்கு ஜெகநாதபுரம்,
   பழனிசெட்டிபட்டி,
   தேனி மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   தேனி–அல்லிநகரம் நகராட்சி,
   தேனி மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   MRC நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு
   அலுவலர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   MRC நகர், சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

செயலாளர்.